**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக அதிகாரசபையின் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

நிதி நிலைமை கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான விடயங்கள், மாற்று வழிகளில் என்னால் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாதிருந்தன. இந்த விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத தொகைகள் மற்றும் நிதி நிலைமை கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று என்பவற்றை உருவாக்கும் கூறுகள் தொடர்பாக ஏதேனும் சீராக்கங்கள் அவசியமானதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் பொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 13 இன் பிரகாரம் முதலீட்டு ஆதனங்கள் தொடர்பான நியாயமான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் யால சுற்றுலா அபிவிருத்தி வலயத்திற்குச் சொந்தமான 35 ஏக்கர் குத்தகையிலாதன காணி தொடர்பான ரூபா 280,000,000 நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 கணக்கீட்டு ஆண்டில் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கையின் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக, 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஒவ்வொரு மாகாண | மாகாண சபைகளினால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான நடைமுறை வேலைக் கணக்கில் | அதிகாரசபைக்கு உரிமை மாற்றப்படாததால், அது ஏற்படும் ஆண்டுகளில் செலவினங்களாக இனங்காணப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சபையினாலும் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 6,496,096 தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்ட வருடத்திற்கு ஏற்ப இனங்காணப்படுவதற்குப் பதிலாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலையாகக் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 6,460,096 தொகையானது மதுரங்குளிய சுற்றுலா தகவல் வசதி நிலைய செயற்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 3,771,807 தொகை மற்றும் துன்ஹித எல்ல செயற்திட்டம் தொடர்பான ரூபா 2,724,289 தொகை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.<br><br>மதுரங்குளிய சுற்றுலாத் தகவல் வசதி நிலையம் தொடர்பான தொகை வேலை இதுவரையில் பூர்த்திப்படாததால், நடைமுறை வேலைக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. மேலும் துன்ஹித உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கட்டம் I இன் கீழ் ரூபா 1,497,627 மற்றும் ரூபா 1,266,662 தொகை வழங்கப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் ஊவா மாகாண சபையினால் வழங்கப்படும் என சம்பந்தப்பட்ட பிரதேச சபைக்கு அதிகாரசபை அறிவித்துள்ளது. எனினும் கட்டம் I இன் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள் அதிகாரசபையின் நிதி பிரிவிற்கு இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதற்குரிய உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் அப் பணத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 49,052,295 ஆக காணப்பட்ட போதிலும் அது ரூபா 50,863,870 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டதால், அந்த வருமானம் ரூபா 1,811,574 ஆல் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் | உரிய வங்கிகள் வழங்கிய தகவல்களின் பிரகாரம் இந்த வட்டி வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டுள்ளது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஐயக்கடன் ஏற்பாட்டு கொள்கையின் பிரகாரம் கடன்பட்டோரிற்காக ரூபா 36,919,352 தொகை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் குத்தகைதாரர்கள் சமர்ப்பித்த ரூபா 9,550,715 மீளளிக்கத்தக்க வைப்பு ஐயக்கடன் ஏற்பாட்டு பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டுக்கான நட்டம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,550,715 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | குத்தகைதாரரின் பெறவேண்டிய பெறுமதிக்காக காணப்படும் நிதி அபாயம் வைப்பிலிடப்பட்ட பணத்திலிருந்து அதே அளவிற்கு அறவிடப்பட முடியும் என்பதால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன்பட்டோரிற்கான ஐயக்கடன் ஏற்பாடு தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தெத்துவ பிரதேசத்தில் காணி சுவீகரிப்பிற்காக செலவிடப்பட்ட ரூபா 39,171,324 தொகை சொத்துக்களாக மூலதனமாக்கப்படுவதற்கும் முற்பணத்தை வங்கியிலிட்டதன் மூலம் பிரதேச செயலாளர் ஈட்டிய ரூபா 2,141,427 தொகை பெறவேண்டிய வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவால் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி (2021/12/31 இல் உள்ளவாறு) நிதிப் பிரிவால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், 2022 கணக்கீட்டு ஆண்டில் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுவீகரிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மூலதனமாக்கப்படுவதற்கும் ஈட்டப்பட்ட வட்டி வருமானமாக கணகீடு செய்யப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கல்பிட்டி அபிவிருத்தி செயற்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 23,562,524 மொத்த சொத்துக்கள் மற்றும் அதே பெறுமதிக்கு சமமான மொத்தப் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றின் தனியான நிரலில் பதிவுசெய்யப்பட்டு, இந்த செயற்திட்டம் அதிகாரசபையின் துணைக்கம்பனியொன்றாக உள்ளது என்ற தவறான | இது உண்மையில் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக்கம்பனியொன்றாக காணப்படாததுடன் கல்பிட்டி செயற்திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பிழையின் அடிப்படையில், கல்பிட்டி செயற்திட்டத்திற்காக தனியான பேரேட்டுக் கணக்கு தொகுதியென்று உள்ளது. எதிர்காலத்தில், இந்த கொடுக்கல்வாங்கல்களை இனங்கண்டு பேரேட்டை | நிதிக்கூற்றுக்கள் அவற்றைப் பயன்படுத்தும் தரப்பினருக்கு சரியான தோற்றத்தை அளிக்கும் வகையில் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணமொன்றை வழங்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்தும் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தன. | மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 2007, 2008, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ரூபா 52,468,596 அபிவிருத்தி கிரயம் தொடர்பான பெறுமானத்தேய்வு ரூபா 9,816,949 ஆல் குறைத்தும் 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 26,422,927 அபிவிருத்தி கிரயம் தொடர்பான பெறுமானத்தேய்வு ரூபா 6,889,068 ஆல் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக முன்கொண்டு வரப்பட்ட மொத்த திரண்ட வருமானக் கணக்கு ரூபா 2,927,881 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு அறிக்கைகளை முழுமையாக பகுப்பாய்வு செய்து தொடர்புடைய திருத்தங்களைச் செய்வதற்கு நாங்கள் இணங்குகிறோம். | அபிவிருத்தி கிரயங்கள் தொடர்பாக பெறுமானத்தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **பெறவேண்டிய கணக்குகள்** | | | | | |
| (i) | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் | 124,913,508 | 80,305,873 | 44,607,635 | 2022.03.23 இல் அதிகாரசபை பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி உள்ளடங்கிய கடிதத்தை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்திற்கு அனுப்பியுள்ளதுடன் அதில் இதுவரை பெறப்பட்டிருக்காத கட்டிட வாடகை வருமானம் ரூபா 96,050,479 தொகை காணப்படுகின்றது. இக் கடிதம் தொடர்பான மீதியை உறுதிப்படுத்தும் பதில் கடிதம் இதுவரை | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டில் ஏனைய பெறவேண்டிய மீதியிலிருந்து ரூபா 13,162,548 தொகை பெறப்பட்டுள்ளது. | |
| (ii) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 9,746,425 | 0 | 9,746,425 | 2022.03.23 இல் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு மீதியை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபை கடிதம் அனுப்பியிருந்தும் அதற்கான பதில் கடிதம் கிடைத்திருக்கவில்லை. | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | இலங்கை மாநாட்டு பணியகம் | 103,260 | 197,048 | 93,788 | மீதியை உறுதிப்படுத்துமாறு 2022.03.23 இல் இலங்கை மாநாட்டுப் பணியகத்திற்கு அதிகாரசபை கடிதம் அனுப்பியிருந்தும் அதற்கான பதில் கடிதம் கிடைத்திருக்கவில்லை. | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 2,803,815 | 4,732,903 | 1,929,088 | எமது கணக்குகளின் பிரகாரம் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெறவேண்டிய மீதிகள் கணக்காய்வுக் கட்டணம், முத்திரை கட்டணம், நிர்வாக கட்டணம் மற்றும் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி என்பன ஆகும். நிதியத்தின் கணக்குகளுக்கு இடையில் ஏதேனும் வேறுபாடு இருந்தால் இந்த ஆண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | | | | |
| (i) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்தவ நிறுவகம் | 6,512,810 | 5,774,778 | 738,032 | 2022.03.23 இல் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு மீதியை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபை கடிதம் அனுப்பியிருந்தும் அதற்கான | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பதில் கடிதம் கிடைத்திருக்கவில்லை. | |
| (ii) | இலங்கை மாநாட்டு பணியகம் | 0 | 31,997,283 | 31,997,283 | உங்களுடனான கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை மாநாட்டுப் பணியகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 31,997,283 தொகை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமானது என்பதுடன் அது 2021 ஆம் ஆண்டுக்கான நிதியத்தின் இறுதிக் கணக்குகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 703,607 | 470,844 | 232,763 | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தியிருக்க வேண்டிய ரூபா 703,607 தொகையானது, காசாளர் தவறுதலாக அபிவிருத்தி நிதியத்திற்குரிய சேகரிக்கப்பட்ட நாளாந்த தொகையை அதிகாரசபையின் கணக்கில் வைப்புச் செய்திருந்த பெறுமதியாகும். இது 2022.02.08 இல் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு காசோலை இலக்கம் 256729 மூலம் செலுத்தப்பட்டது. | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வியாபார கடன்பட்டோர் | 245,994,317 | 281,681,787 | 35,687,470 | 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பெறவேண்டிய உப பேரேட்டின் மொத்தக் கணிப்பீட்டின் போது இந்த வேறுபாடு ஏற்பட்டது. பேரேட்டுக் கணக்குகளுடன் ஒப்பிடுவதன் மூலம் உப பேரேட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (01 வருடத்திற்கும் குறைவாக உள்ளதால், அறவிடமுடியாக்கடன் சீராக்கத்தில் இது தாக்கமளித்திருக்கக்கவில்லை) | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூபா (மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மூலதன ஒதுக்கம் | (243.7) | விபரமான பட்டியல்கள் | இந்த மீதிகளை பதிவழிப்பதற்கு பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | விபரமான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முதலீடு | 54.6 | முதலீட்டுச் சான்றிதழ்கள் | இந்த மீதிகளை பதிவழிப்பதற்கு பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கல்பிட்டி மூலதனம் | 98.8 | பங்குதாரர்களின் பதிவேடுகள் மற்றும் வங்கி வைப்பு விபரங்கள் | பங்குதாரர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. வங்கி வைப்பு விபரங்களுக்கு கொடுக்கல்வாங்கல்கள் அடங்கிய காசுப் புத்தகத்தின் (பேரேடு) மென் பிரதிகள் எங்களால் வழங்கப்பட முடியும் என்பதை தயவுடன் குறித்துக் கொள்ளவும். | மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அபிவிருத்தி கிரயம் | 215.2 | மூல ஆவணங்கள் மற்றும் விபரமான பட்டியல்கள் | கணக்குகளில் உள்ள கொடுக்கல்வாங்கல் பகுப்பாய்வு செய்யப்பட்டு, செயற்திட்டக் கோவைகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார கடன்பட்டோர் பெறுமதி ரூபா 245,994,317 ஆக இருந்ததுடன் 2022 செப்தெம்பர் 05 இல் உள்ளவாறு எந்த கடன்பட்டோரிடமிருந்தும் மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. அத் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட வியாபார கடன்பட்டோர் மீதிகளின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், 3 முதல் 4 ஆண்டுகள் வரை நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 29,861,932 கூட்டுமொத்தமாக உள்ளதுடன் 4 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 53,214,835 கூட்டுமொத்தமாகும். அதன் பிரகாரம் 3 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ள கடன்பட்டோரின் மொத்த பெறுமதி ரூபா 83,076,767 ஆகும். எனினும், அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட வயது பகுப்பாய்வில் உள்ள முரண்பாடுகள் காரணமாக, இந்த பெறுமதிகளின் சரியான தன்மை குறித்து திருப்தி அடைய முடியவில்லை. | 03 ஆண்டுகளுக்கும் மேலான கடன்பட்டோர் மீதிகளிற்கு பணம் பெறுவதற்கான நிகழ்தகவு குறைவாக இருப்பதால், இந்த மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியும். | நிலுவையாக உள்ள கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 9,439,982 பெறவேண்டிய வைப்பு மீதியில் 1989 முதல் 2007 வரை வெளிநாட்டில் அலுவலக வாடகைக்காக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,281,823 தொகை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எழுத்துமூல ஆதாரம் இல்லாத இந்த புள்ளிவிவரங்கள் பேரேட்டில் இருந்து அவற்றை பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு அவர்களின் தீர்மானத்திற்காக அனுப்பப்பட்டுள்ளன. | நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் கணக்குகளில் இருந்து பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 37 விருந்தினர் இல்லங்களிலிருந்து பெறப்பட வேண்டிய வாடகை வருமானத்தின் மொத்த நிலுவைப் பெறுமதி ரூபா 26,364,027 ஆக காணப்பட்டதுடன் அதில் 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நிலுவை வாடகை வருமானம் ரூபா 10,622,282 ஆகும். இந்த 37 விருந்தினர் இல்லங்களில் 2009 ஆம் ஆண்டில் 10 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்ட கல்கமுவ விருந்தினர் இல்லத்தை குத்தகைதாரர் வேறு ஒருவருக்கு மாற்றியிருந்தார். 2021 ஆம் ஆண்டில், அதிகாரசபை வழக்கு ஒன்றை தாக்கல் செய்து மேற்படி நிலுவைத் தொகையில், குத்தகைதாரரிடம் இருந்து சேகரிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 2,670,873 ஆகும். எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு விடுதி பிரிவுக்கும் கணக்குப் பிரிவுக்கும் இடையேயான பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,172,098 வேறுபாட்டைக் கொண்டிருந்தது. | 37 விருந்தினர் இல்லங்களில், 28 விருந்தினர் இல்லங்களுக்கு மாத்திரமே குத்தகை உடன்படிக்கைகள் உள்ளன, மேலும் மஹியங்கனை மற்றும் நிக்கவெரட்டிய விருந்தினர் இல்லங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. தற்போது செயற்படாத விருந்தினர் இல்லங்களில் முன்பு வாடகைக்கு இருப்பவர்களிடம் இருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். கல்கமுவ விருந்தினர் இல்லத்தின் குத்தகை உடன்படிக்கைகள் 2019.04.08 இல் முடிவடைந்ததுடன் 2019 ஏப்ரல் இல் உள்ளவாறு முகாமைத்துவ பீரிவின் கணக்குத் தகவல்களின் பிரகாரம் ரூபா 2,660,150 பற்றாக்குறைத் தொகை அறிக்கையிடப்பட்டது. நிலுவைகளை அறவிடுவதற்கு வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்னர் பலமுறை கோரிக்கை கடிதம் அனுப்பிய போதிலும் குத்தகைதாரர்களிடம் இருந்து உரிய பதில் கிடைத்திருக்கவில்லை. 2022 மார்ச் மாதத்தில் விருந்தினர் இல்லத்தின் உடைமை அதிகாரசபைக்கு திரும்பப் பெறப்பட்டிருந்த போதிலும் நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வாடகை வருமான நிலுவைகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதுடன் ஓய்வு விடுதி பிரிவுக்கும் கணக்குப் பிரிவுக்கும் இடையே வாடகை வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் என்பவற்றின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நானாவித கடன்பட்டோர் மீதி ரூபா 6,081,715 ஆகும். 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நானாவித கடன்பட்டோர் மீதி பெறுமதி ரூபா 5,832,396 ஆகும், இது 96 சதவீதமாக இருந்தது. மேலும், நானாவித கடன்பட்டோரில் ரூபா 559,961 | இந்த மீதிகள் பற்றிய கணக்குத் தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எழுத்துமூல சான்றுகள் கிடைக்காத ஆரம்ப மீதியை பதிவழிப்பு செய்வதற்கு உரிய அங்கீகாரத்திற்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதிகளை உரிய அங்கீகாரங்களுடன் பதிவழிப்பு செய்யப்பட வேண்டியதுடன் மீதிகள் இணக்கம் செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்யப்படாத தொடக்க மீதியொன்று காணப்பட்டது. | | வேண்டும். |
| (உ) | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்குமாறு சுற்றுலா அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு இணங்க, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்ட ”டுக் டுக் நிகழ்ச்சித்திட்டம்'' இற்கான நிதிப் பங்களிப்பை மீள்நிரப்பு செய்வதற்கு அமைச்சு இணங்கியிருந்தது. எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ரூபா 13,227,648 தொகை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான இறுதி தீர்மானம் இந்த நிதியாண்டில் அமைச்சுடன் கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்படும். | உரிய நிதிப் பங்களிப்பு அமைச்சிடம் இருந்து மீள்நிரப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சுற்றுலா அமைச்சின் செயலாளர் 2021 நவம்பர் 30 முதல் திசெம்பர் 03 வரை ஸ்பெயினில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் வருடாந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் அதிகாரசபையால் செலவிடப்பட்ட ரூபா 1,398,426 தொகையான கிரயம் 2022 செப்தெம்பர் 05 வரையிலும் அமைச்சினால் மீள்நிரப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 நவம்பர் 9 இல் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு, சுற்றுலா அமைச்சின் செயலாளர் மற்றும் சுற்றுலா அபிவிரத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அமைப்பின் வருடாந்திர கூட்டத்தில் பங்கேற்க எழுத்து மூலம் அழைத்தார். அதன் பிரகாரம் நாங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கும், சனாதிபதி செயலாளரின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டு தேவையான பணிகளைச் செய்தோம். கடந்த காலங்களில் அவ்வாறு நடைபெற்ற நிகழ்வுகளுக்கு நிகரான கிரயத்தை இந்த அதிகாரசபை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அமைச்சின் செலவினக் குறியீடுகளில் இருந்து அத்தகைய விஜயங்களுக்கான செலவினங்களை ஈடுசெய்வதற்கு அமைச்சிற்கு அறிவிக்கப்படும். | சுற்றுலா அமைச்சின் செயலாளர் சார்பில் அளிக்கப்பட்ட நிதிப் பங்களிப்பை அமைச்சிடம் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 153,739,503 வைப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில், இனங்காணப்படாத மற்றும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 4,275,041 தொகையாக இருந்தது. | 2021/12/31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாத காசோலை கணக்கு மீதி தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மீதியுடன் பொருந்தாது. எனவே, தாங்கள் மீதியை எவ்வாறு பெற்றீர்கள் என்பது பற்றிய தகவலை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். | வைப்பு மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்கில் உள்ள மீதிகள் குறித்து பகுப்பாய்வொன்று செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 153,739,503 தொகையான வைப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட முன்னரே மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு பெறுமதியான ரூபா 24,620,808 இற்குரிய வாடிக்கையாளர்களை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் இனங்காண முடியவில்லை. மேலும், குறித்த மீதிக்கான வயது பகுப்பாய்வும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இப் பெறுமதி தொடர்பான வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் வைப்பாளர்களிடமிருந்து அதிகாரசபை தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வரை வாடிக்கையாளர்களின் பட்டியலைத் தயாரிப்பது கடினமாக உள்ளது. | வைப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட வாடிக்கையாளர்களை இனங்காண்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை யுனிசெவ் அமைப்பு, விடுமுறை விடுதி நடைமுறைக் கணக்கு, குச்சவெளி மற்றும் பாசிக்குடா என காட்டப்பட்ட 4 இடங்களுடன் தொடர்புடைய ரூபா 2,180,326 கூட்டுமொத்த தொகை செலுத்த வேண்டியவைகளாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்தக் கணக்குகளைக் கண்டறிந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துமூல ஆதாரம் இல்லாதமைக்காக பேரேட்டிலிருந்து (சம்பந்தப்பட்ட அங்கீகாரங்களிற்கு உட்பட்டு) இந்த மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரங்களுடன் பேரேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 ஆண்டுகளாக நிலுவையாகவுள்ள ரூபா 333,694 வெளிநாட்டு முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பேரேட்டில் இருந்து எழுத்துமூல ஆதாரம் இல்லாததற்காக இந்த மீதிகளை பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | முறையான அங்கீகாரத்துடன் பேரேட்டில் இருந்து இதனை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் ரூபா | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம் | | | |
| (i) சட்டத்தின் 6.1 (அ) மற்றும் (ஆ) பிரிவு | சுற்றுலா அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்காண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 முதல், சுற்றுலாத் துறைக்கான தேசிய கொள்கையை அமைச்சு தயாரிக்கத் தொடங்கியது. நிறுவனத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் நாங்கள் நிறுவனத் திட்ட தயாரிப்பில் இருந்தோம். முன்மொழியப்பட்ட கொள்கை உருவாக்கம் இறுதி கட்டத்தில் உள்ளதுடன் திட்டத்தை தயாரிப்பதற்காக நாங்கள் அமைச்சுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம், அதற்கேற்ப, நீண்ட கால திட்டம் மற்றும் இலக்குகள் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும். | சுற்றுலா அபிவிருத்திக்கான நீண்ட கால இலக்குகள் மற்றும் நான்கு ஆண்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | சட்டத்தின் 26(3) ஆம் பிரிவு | இனங்காணப்பட்ட சுற்றுலா வலயங்களுடன் தொடர்புடைய பிரதான திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் பிரகடனப்படுத்தப்பட்ட அந்த சுற்றுலா அபிவிருத்தி வலயங்களினுள் மேற்கொள்ளப்படக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தக மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான பிரமாணங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினை தொடர்பான திட்டங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டு முதல், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) ஒத்துழைப்புடன் பிரதான திட்டத் தயாரிப்பு தொடங்கப்பட்டு, பல கட்டங்களில் திட்டமிடப்பட்டது. அவற்றில், எல்ல சுற்றுலாப் பகுதி ஏற்கனவே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் (2022) இறுதியில் அறுகம்பே மற்றும் நுவரெலியா சுற்றுலா வலயங்களில் சுற்றுலாத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளன. கல்பிட்டி மற்றும் ஹிக்கடுவ சுற்றுலா வலயங்கள் தற்போது சுற்றுலாத் திட்டமிடலுக்கு உட்பட்டுள்ளன. மேலும் அடையாளம் காணப்பட்ட ஏனைய சுற்றுலா வலயங்கள் இரண்டாம் கட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் பிரமாணங்கள் உருவாக்கப்பட வேண்டும். |
| (iii) | சட்டத்தின் 48(4) ஆம் பிரிவு | 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரையிலான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட பதிவு செய்யப்படாத 504 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபையின் | சுற்றுலா அமைச்சின் செயலாளர் மற்றும் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தின் உடன்படிக்கையின் அடிப்படையில் சேவை வழங்குநர்களுக்கு ஆதரவு தேவைப்படும் போதுஇந்தத் தொழிலை | அதிகாரசபையின் அமலாக்கல் பிரிவு 2018 முதல் 2022 வரை பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமலாக்கல் பிரிவு முன்மொழிந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2022 செப்தெம்பர் 05 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலிழக்க அனுமதிக்காமல் பாதுகாப்பதற்காக வழக்குகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. அந்த வாடிக்கையாளர்கள் அரசாங்கத்திற்கு செலுத்தும் வரி மூலம் பேணப்படும் ஒரு அமைப்பாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றிலிருந்து மீள்வதற்கு சிறிது காலம் எடுக்கும். அதுவரை அவர்களையும் தொழிலையும் பாதுகாப்பது நமது பொறுப்பாகும். | நோக்கில் விசாரணைகளை நடாத்தியதால், அத்தகைய நடவடிக்கைகள் ஒரே நேரத்தில் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பிஈடி 03/2018 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய பிஈடி 03/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2021 ஆம் நிதியாண்டில் அதிகாரசபை நட்டத்தைப் பதிவு செய்திருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நட்டத்தை குறைத்திருந்த நிறுவன ஊழியர்களுக்கு ரூபா 5,000 தொகையை மாத்திரம் மிகையூதியமாக செலுத்த முடியும். எனினும், ஒவ்வொரு ஊழியருக்கும் மீளாய்வாண்டில் ரூபா 13,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகையூதியமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 2,565,148 கூட்டுமொத்தமாகும். | நிறுவன நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து பரிந்துரையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மிகையூதியக் கொடுப்பனவு தொடர்பாக பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவது அவசியம். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் 5 | 2017 – 2020 காலப்பகுதிக்கான | சுற்றறிக்கையின் பிரகாரம் 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | வருடங்கள் தொடர்பாக மூலோபாய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு தொடங்குவதற்கு முன்னர் அதிகாரசபை அத்தகைய திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. மேலும் 2022 சனவரியில், கடந்த 2 வருடங்களை உள்ளடக்கிய 2020-2022 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | மூலோபாய திட்டமொன்று அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், 2019 இல் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் 2020 முதல் நடைமுறைக்கு வந்த கொவிட் 19 நிலைமை என்பன இத் திட்டத்தை செயற்படுத்துவதில் பல சவால்களை ஏற்படுத்தியது. 2022 முதல் தொழில்துறை கொண்டுவந்திருந்த புதிய தொடக்கங்களுடன் 2022-2025 காலப்பகுதிக்காக மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | வருடங்கள் தொடர்பாக மூலோபாய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| | (ii) | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்குகள் 186 நாட்கள் தாமதத்துடன் 2022 செப்தெம்பர் 02 இலேயே சமர்ப்பிக்கப்பட்டன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2021 ஆம் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு பணிப்பாளர் சபை 2022 பெப்ரவரி 28 இல் அங்கீகாரம் அளித்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதலாவது கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2022 ஆகஸ்ட் 17 இல் நடைபெற்றது. குறித்த கூட்டத்தின் பரிந்துரை 2022 ஆகஸ்ட் 30 இல் தகவல்களுக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, முன்னைய அங்கீகாரம் மீண்டும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை பின்பற்றுதல் அவசியமாகும். |

| | | |
|---|---|---|
| | | உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 101,319,843 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 118,817,905 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 17,498,062 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி ரூபா 37,268,590 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 40,718,097 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | துன்ஹித எல்ல செயற்திட்டம் 20 சுற்றுச்சூழலுக்கு உகந்த கடைகள், கடையொன்றிற்கு 02 இருக்கைகள், பாதுகாப்பு வேலி மற்றும் பெயர் பலகை ஆகியவற்றை ரூபா 7,488,133 பெறுமதியில் நிர்மாணிக்கும் நோக்கத்துடன் 2017 பெப்ரவரியில் தொடங்கப்பட்டதுடன் 2017 திசெம்பர் 15 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2018 சனவரி 22 இல் உள்ளவாறு 10 கடை அறைகள் மற்றும் பெயர் பலகை மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டு பணிகள் நிறுத்தப்பட்டன. எனினும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,350,000 கிரயத்தில் துன்ஹித செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் மேலும் 5 கடைகளை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை தீர்மானித்திருந்தது, ஆரம்ப திட்டத்தில் 5 அறைகளின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. மேலும், அப்போது அறை ஒன்றுக்கான கிரயம் ரூபா 272,429 ஆக இருந்தது. 4 ஆண்டுகள் | முதற்கட்டமாக சொர்ணதோட்டை பிரதேச சபையினால் 5 கடை அறைகள் நிர்மாணிக்கப்பட்டன. எஞ்சிய பகுதியை கட்டுவதற்கு உள்ளூராட்சி சபையிடம் பணம் இல்லை என தெரிவிக்கப்பட்டது. 2021/12/02 இல் பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இரண்டாம் கட்டமாக 05 சூழலுக்கு உகந்த கடைகளை நிர்மாணிப்பதற்கு ஊவா மாகாண சுற்றுலா பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் கொரோனா தொற்றுநோய், பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல், மாகாணங்களைத் தனிமைப்படுத்துதல் மற்றும் விலைகளில் உயர்வு காரணமாக ஒப்பந்ததாரர்களைத் தெரிவுசெய்வதில் சிரமம் | எல்ல அதிக சுற்றுலாத்தலங்களைக் கொண்ட பிரதேசமாக இருப்பதால், உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதும், திட்டமிட்டவாறு பணிகளை பூர்த்தி செய்ய வேண்டியதும் அதிகாரசபையின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமதம் காரணமாக, அறை ஒன்றுக்கான கிரயம் ரூபா 470,000 ஆக உயர்த்தப்பட்டது,இது 72 சதவீத அதிகரிப்பாகும். | இருப்பதாக பணியகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், அவ்வப்போது மாகாணங்களை தனிமைப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மாகாணசபை பெறுகையை தாமதப்படுத்தியதுடன், ஒதுக்கப்பட்ட பணம் அதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | புத்தளம் மாவட்டத்தில் உள்ள மதுரங்குளியவில் சுற்றுலா தகவல் மற்றும் வசதி நிலையம் (ஆறுதல் நிலையம்) ஒன்றை அமைப்பதற்காக 2016 ஒக்தோபர் 27 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்கு, அதிகாரசபை வடமேல் மாகாண சபைக்கு ரூபா 6,771,807 தொகையை செலுத்தியிருந்தது. ஆனால், எஞ்சிய வேலைக்காக 2016 திசெம்பர் 22 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 5,846,556 விலைப்பட்டியல்களில் பொறியியல் சான்றிதழ்கள் தவறானவை என்பதை சுட்டிக்காட்டி மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அதிகாரசபை பணத்தை விடுவித்திருக்கவில்லை. இதனால், செயற்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டு, செயற்படாமல் உள்ளது. இதுவரை முறையாக பராமரிக்கப்படாததால், தண்ணீர் கசிவு ஏற்பட்டு, கட்டிடங்கள் பழுதடைந்திருப்பது பௌதீக கணக்காய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டது. | கொழும்பு புத்தளம் வீதியின் முக்கியமான பகுதியில் உள்ள மதுரங்குளிய தகவல் நிலையத்தை முன் கொண்டுவருவதற்கு மாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றன. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, சுற்றுலா அமைச்சு மற்றும் வடமேல் மாகாண சபை என்பன நிர்மாணப் பணிகளுக்காக நிதியை செலவிட்டன. அனைத்து பெறுவனவு நடவடிக்கைகளும் வடமேல் அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டன. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ஏறத்தாழ ரூபா 6.8 மில்லியனாகும். இச் செயற்திட்டம் தொடர்பில் கணக்காய்வு விசாரணையொன்று காணப்பட்டதுடன் வடமேல் மாகாண சபை வழங்கிய பதில்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், மாகாண சபை நீர் கசிவுக்கான பொறியியல் ஆலோசனைகளை பெற்று அதனை சீர்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இந்த இடத்தின் பொது | கல்பிட்டி சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு ஆறுதல் நிலையமாக இது இருப்பதால், இச் செயற்திட்டத்தின் வெற்றிக்கு அதிகாரசபை தீவிர பங்களிப்பை வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விவகாரங்களை நடாத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் அளுத்நுவர தடிமுண்ட தேவால பிரதேசத்தில் சுகாதார வசதிகளை அமைப்பதற்காக ரூபா 12,775,030 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் அதிகாரசபையானது 2020 யூலை அளவில் சப்ரகமுவ மாகாண சபைக்கு ரூபா 10,799,405 தெகையை செலுத்தியுள்ளது. எனினும், பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரம் பெறப்படாமல், அதில் ரூபா 7,216,214 தொகை மேலதிக பணிக்காக செலுத்தப்பட்டிருந்ததுடன் அளவுத் தாள்களின் பிரகாரம் இணங்கப்பட்ட ஆனால் பூர்த்தி செய்யப்படாத பணியின் பெறுமதி ரூபா 8,552,268 ஆகும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அளுத்நுவர தடிமுண்ட தேவால தளத்தில் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத் தொகை ரூபா 12,775,030 ஆகும். தேவால தளத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார வசதிகள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாவிற்கு சம்பரகமுவ மாகாண சபை விரிவான பதிலொன்றை அனுப்பியிருந்தது. இதுவரை செலுத்தப்பட்ட தொகை ரூபா 12,205,711.16 ஆகும். 2022.06.23 இல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது, இது இறுதிக் கொடுப்பனவு வரையிலான முழு கொடுப்பனவையும் உள்ளடக்கியது. தற்போது மாகாண சபையினால் குறித்த இடத்தில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக இது திறந்து வைக்கப்பட்டுள்ளது. | திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தங்குமிடம் மற்றும் சுற்றுலா வசதிகள் என கடந்த ஆண்டு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 5378 ஆகவும் மீளாய்வாண்டில் 5872 ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம் புதிதாக பதிவு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 494 ஆகும். எனினும் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5378 இடங்களிலிருந்து 783 இடங்களைக் கழித்த போது மீளாய்வாண்டில் அவர்களது பதிவை புதுப்பித்த இடங்களின் எண்ணிக்கை 783 மாத்திரமேயாகும். இது 4595 இடங்கள் அவர்களது பதிவை | மீளாய்வாண்டில் தங்குமிட வசதிகளை வழங்கும் மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை 552 ஆகவும், சேவை வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 194 ஆகவும் உள்ளது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 726 நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2021.12.31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை 5872 ஆகும். மேலும், 1454 நிறுவனங்கள் 2021 இல் தங்கள் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துள்ளன. | தங்குமிடம் மற்றும் சுற்றுலா வசதிகளை வழங்கும் இடங்களின் ஒழுங்குமுறை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறனாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புதுப்பிக்கவில்லை என்பதை காண்பிக்கிறது. அதன் பிரகாரம் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களின் ஒழுங்குமுறை மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தததென்பதை காண்பிக்கிறது. | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை என்பது சுற்றுலா சபை அனுமதிப்பத்திரம் வழங்கத் தொடங்கிய திகதியிலிருந்து பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையாகும். அந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டாலோ, மூடப்பட்டாலோ, இடமாற்றம் செய்யப்பட்டாலோ அல்லது உரிமையாளர்கள் இறந்துவிட்டாலோ, அதிகாரசபைக்கு முறையாக அறிவிக்கப்பட்டால் அல்லது கள ஆய்வின் போது கண்டறியப்பட்டால் தவிர பதிவு இரத்து செய்யப்படாது. அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்காக 2996 நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 6 மாதங்களுக்கு தற்காலிக பதிவு செய்யப்படுகிறதுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை. கடந்த காலங்களில் தொழில்துறையினர் எதிர்கொண்ட சூழ்நிலையின் அடிப்படையில், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பதிவை புதுப்பிப்பதற்காக சலுகைக் கால அவகாசம் வழங்கப்பட்டதுடன், அதுவரை பதிவு புதுப்பிக்கப்படாத போதிலும் செயற்பாடுகளைத் தொடர்வதற்கும், கலால் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. | |
| (உ) | 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அமலாக்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் சுற்றுலா நிறுவனங்கள் அல்லது சுற்றுலா சேவைகளாகச் செயற்படும் 640 பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் | அமலாக்கல் பிரிவு 2018 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இரண்டு விசாரணை உத்தியோகத்தர்களுடன் செயற்பாடுகளைத் தொடங்கியதுடன் பின்னர், நாடு முழுவதும் உள்ள விசாரணைப் பணிகள் ஒரு | அமலாக்கல் பிரிவு 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை செயற்பாட்டில் இருந்ததால், ஒழுங்குமுறை நடவடிக்கைகளும் அதனுடன் இணைந்து |

| | | |
|---|---|---|
| அடையாளம் காணப்பட்டன. இருப்பினும், அவற்றில் 20 நிறுவனங்கள் மாத்திரமே 2022 யூலை 03 வரையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சுற்றுலாத் துறையில் முறைசாரா வணிகத்தை மேற்கொண்ட நிறுவனங்களுக்காக அமலாக்கல் பிரிவினால் நடாத்தப்பட்ட ஒழுங்குமுறைகள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த பிரிவின் செயலாற்றல் குறித்து முகாமைத்துவம் போதுமான மதிப்பீட்டைச் செய்திருக்கவில்லை. மேலும் 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அந்த பிரிவின் ஆலோசகர், விசாரணை உத்தியோகத்தர் மற்றும் சட்ட ஆலோசகர் ஆகியோருக்கான படிகளாக மாத்திரம் ரூபா 13,397,500 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. | உத்தியோகத்தரிற்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2018-2022 காலப்பகுதியில், 640 அலகுகளை உள்ளடக்கி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>அதன் பிரகாரம் 15% இற்கும் அதிகமான நிறுவனங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 32 நிறுவனங்களின் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. நிறுவனத்தின் உரிமைத்துவத்தை நிரூபிக்கும் சட்ட ஆவணம் இல்லாதமை, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டம் இல்லாதமை, தீ பாதுகாப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நிதித் திறன் இல்லாதமை மற்றும் தேவையான பயிற்சியை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள இயலாமை மற்றும் தற்போதைய சூழ்நிலை காரணமாக உரிய களப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சிறிது கால அவகாசம் எடுத்துக்கொள்ளப்படுதல் மற்றும் அதற்கான கட்டணத்தை செலுத்த இயலாமை என்பன பதிவு செய்ய முடியாதமைக்கான சில காரணங்களாகும். பொதுவாக சேவை வழங்குநர்கள் அரசாங்கத்திற்கு வரிகளை செலுத்துவதற்கான எதிர்மறையான எதிர்செயற்பாடும் அதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. | செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) அதிகாரசபைக்கு எதிராக இரண்டு அதிகாரிகளால் தமது அடிப்படை | இந்த இரண்டு வழக்குகளுக்கும் பணிப்பாளர் | மனித வள முகாமைத்துவம் |

உரிமைகளை மீறியதற்காக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளில், தாபன விதிக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 5.1 மற்றும் 5.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சட்டமா அதிபரின் ஆலோசனையின்றி, தனியார் சட்டத்தரணிகளின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மேற்படி இரண்டு வழக்குகளுக்கும் தொடர்புடைய தனியார் சட்டத்தரணிகளுக்கு ரூபா 2,828,803 தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும், பொது முயற்சிகளுக்கான குழு வழங்கிய 2021 திசெம்பர் 10 ஆம் திகதிய COPE/09/1/2020 ஆம் இலக்க பணிப்புரைகளின் பிரகாரம் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளுக்கு பெரும் பணத்தொகையைச் செலவிட்டு தனியார் சட்டத்தரணிகளின் உதவியைப் பெற வேண்டாம் என்று அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டது.

சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையால் தனியார் சட்டத்தரணிகளின் உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை அது தொடர்பான கோவைகளை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரி பல கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் பட்டியலிடப்பட்ட சோதனை திகதிக்கு முன்னர் முறையான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கோப் குழுவின் பரிந்துரையை தொடர்ந்து, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது எந்தவொரு புதிய வழக்குக்கும் தனியார் சட்டத்தரணிகளின் சேவைகளைப் பெற்றிருக்காததுடன் மேற்குறிப்பிட்ட சட்டங்களிற்காக தற்போது சேவைகளை பெற்றுக்கொள்கின்ற தனியார் சட்டத்தரணிகளுக்குப் பதிலாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் கிடைத்தவுடன் அதன் பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பயனுள்ள முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் மூலம் நிறுவனத்தின் சட்டச் செலவினங்களை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாசிக்குடா தேசிய ஓய்வு விடுதி வளாகத்தில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவுவதற்கும், முறைமையை பராமரிப்பதற்கும் 2011 யூன் 18 இல் தனியார் கம்பனியொன்றுடன் அதிகாரசபை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. வளாகத்தில் அமைந்துள்ள 14 ஹோட்டல்களின் கட்டணங்களை சேகரித்து அவ்வாறு அறவிடப்பட்ட தொகையை மேற்படி தனியார் கம்பனிக்கு செலுத்துதல் ஆகியன அதிகாரசபையின் பொறுப்பாகும். செயற்திட்டத்திற்கு தேவையான 118 பேர்ச் காணியை அதிகாரசபை வழங்கியிருந்தது. எனினும், 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை 14 ஹோட்டல்களில் இருந்து பெறவேண்டிய தொகை ரூபா 299,461,325 ஆக காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 2021 ஏப்ரல் 20 இல் ரூபா 1,644,750 கிரயத்தில் அதிகாரசபைக்கு முறைமையை கையகப்படுத்துவதற்கான கட்டுப்படியாகும் தன்மை குறித்த நிதி ஆலோசனையைப் | நிதி ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2021 ஏப்ரல் 20 இல் சலுகைக் கடிதம் வழங்கப்பட்டதுடன் உடன்படிக்கை 2021 மே 10 இல் கைச்சாத்திடப்பட்டது. எனினும், நாட்டில் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக கள விஜயங்கள் தாமதமாகியிருந்தன. முதன்முறையாக, 2021.07.04 முதல் 06 வரை ஆலோசனை உத்தியோகத்தர்களுடன் இணைந்து கள பரீட்சிப்பு நடாத்தப்பட்டது. ஆலோசனை நிறுவனம் 2021 ஆகஸ்ட் 20 முதல் வரைவு அறிக்கைகளை காலரீதியாக சமர்ப்பித்தது எனவும் தொடர்புடைய தொடர்பாடல் நடவடிக்கைகள் அத் திகதி முதல் அமுல்ப்படுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய ரூபா 299,461,325 தொகையை சேகரிப்பதற்கு, ஒவ்வொரு மாதமும் விலைப்பட்டியல்கள் அனுப்பப்படுகின்றன. எனினும், அவர்கள் தொடர்ந்து பணம் செலுத்தத் தவறியிருந்தனர். 2022 சனவரி 19 இல் சுற்றுலா அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் இடம்பெற்று வரும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைவதால், தற்போது | கொவிட் தொற்றுநோய் நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் 7 ஆண்டுகளில் இருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்காததால் இது குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கு தனியார் துறையின் கூட்டுமுயற்சி ஒன்றிற்கு சலுகைக் கடிதமொன்று வழங்கப்பட்ட போதிலும் 2022 செப்தெம்பர் 05 வரையிலும் அது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவையை செலுத்த முடியாதிருந்ததுடன் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. | |
| (ஆ) | அதிகாரசபைக்கு சொந்தமான 04 தேசிய விடுமுறை விடுதிகளின் மீளாய்வாண்டிற்கான மொத்த நட்டம் ரூபா 50,740,838 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் மொத்த நட்டம் ரூபா 46,015,590 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நான்கு ஓய்வு விடுதிகளின் மொத்த நட்டத்தில் 10 சதவீத அதிகரிப்பு காணப்பட்டதுடன், அது தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபைக்கு சொந்தமான ஓய்வு விடுதிகள் ஆரம்பம் முதலே உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு சிநேகபூர்வ சேவையை வழங்கும் நோக்கில் இலாபம் ஈட்டும் நோக்கமின்றி பேணப்பட்டு வருகின்றதுடன் விலைகள் செலவினங்களை விட சற்று அதிகமாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டு முதல் விலைகளில் உயர்வு காணப்படலில்லை. | நட்டம் ஏற்படாமல் சேவைகளை பேணுவதற்கு முகாமைத்துவம் போதிய கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | யால சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 2014 இல் 5 கம்பனிகளுக்கு 35 ஏக்கர் குத்தகைக்கு விடப்பட்டது, மேலும் 16.8 ஏக்கர் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 2 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. எனினும், குத்தகைக்கு பெற்ற 7 கம்பனிகளில் 2 கம்பனிகளே மீளாய்வாண்டின் இறுதியில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் குத்தகைக்கு பெற்ற கம்பனி ஒன்றினால் உயர் நீதிமன்றத்தினால் | யால சுற்றுலா வலயத்தில் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி பிரதான திட்டத்தின் பிரகாரம் முதலீட்டாளர்களுக்கு 07 காணித்துண்டுகளை வழங்க முடிந்தது. அவற்றில் இரண்டு கம்பனிகளின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு கம்பனி தற்போது அதன் இறுதிக்கட்ட செயற்பாட்டில் உள்ளது. இன்னும் இரண்டு கம்பனிகள் நிர்மாண கட்டத்தில் உள்ளன. குறித்த கம்பனிக்கு வழங்கப்பட்ட காணி உடன்படிக்கையின் பிரகாரம் கொடுக்கப்படாததால், 2019 | குத்தகைதாரர்களினால் செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் ஏற்படும் தாமதங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் சட்டமா அதிபரின் ஆலோசனையின்றி தனியார் சட்டத்தரணிகளின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிறுவனத்தின் சட்டச் செலவினங்களை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட்டமை மற்றும் நிலுவைத் தொகை செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பாக அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையானது குத்தகை உடன்படிக்கையை 2020 மே மாதத்தில் ”செயற்பாடுகளை தொடங்கவில்லை” எனக் கூறி நிறுத்தியது. குத்தகை உடன்படிக்கை நிறுத்தப்பட்டதற்கு எதிராக குத்தகைதாரர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதிகாரசபைக்கு எதிராக தடை உத்தரவை பெற்றிருந்தார். எனினும், இந்த காணியை வேறொரு கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2020 ஒக்தோபர் 22 இல் அதிகாரசபையால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆரம்ப குத்தகைதாரர் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்ததுடன் இந்த வழக்குகள் அனைத்தும் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாமல், தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டு 2021 ஆம் ஆண்டில் சட்டக் கட்டணமாக ரூபா 1,544,168 செலுத்தப்பட்டிருந்தது. | ஆகஸ்ட் 14 இல் (19/2097/106/032) உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு வேறு கம்பனிக்கு வழங்கப்பட்டது. சிக்கல் நிலைமை ஏற்பட்டு சட்ட நிலைமையை நோக்கி நகர்ந்துள்ளது. அந்த நேரத்தில், இந்த உண்மைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன் இந்த கம்பனி நிலுவையாக உள்ள வாடகைத் தொகையை அதிகாரசபைக்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதுபற்றி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு முறையாக தகவல் தெரிவிக்கப்படாததன் அடிப்படையில், இந்த வழக்கை பேணுவதற்கான அடிப்படை தயார் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பழைய கட்டிடத்தின் மிகவும் மோசமாக பராமரிக்கப்படும் கூரை, சமையலறை, லொபி பகுதி | பழைய கட்டிடத்தின் மேற்கூரை ஏற்கனவே அகற்றப்பட்டு, அகற்றப்பட்ட குறித்த கட்டிடத்தின் | தேசிய விடுமுறை விடுதியின் பராமரிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| மற்றும் சாப்பாட்டு பகுதி, செயற்படாத குளிரூட்டிகள், உடைந்த குளியலறை பொருத்துக்கள், பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள் போன்ற குறைபாடுகள் ஓய்வு விடுதியின் அலங்காரத்திற்கு இடையூறாக குவிந்துள்ளமை அதிகாரசபைக்கு சொந்தமான அனுராதபுரத்தில் உள்ள தேசிய விடுமுறை ஓய்வு விடுதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. | பயன்படுத்தக்கூடிய பாகங்கள் அதே வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ளன. பிரதான மண்டபம், லொபி பகுதி மற்றும் உணவு கூடம் ஆகியன புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்டதெனவும் உணவு கூடம் ஏற்கனவே புனரமைக்கப்பட்டு வருகிறதெனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஓய்வு விடுதி பகுதியில் குவிந்து கிடக்கும் ஏராளமான கழிவுப் பொருட்கள் ஏற்கனவே ஏலமிடப்பட்டு அகற்றப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது. புதிய கட்டிடத்தில் குளிரூட்டிகள் மற்றும் குளியலறை சாதனங்கள் பழுதடைந்துள்ளதைக் கண்டறிந்து, அவற்றை சீர்செய்யும் வரை ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்துவது நிறுத்தப்பட்டது. | வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் குச்சவெளிக்காக அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்ட 510.086 ஏக்கர் காணியில் 35 ஏக்கர் காணி மாத்திரமே 2020 ஆம் ஆண்டளவில் 2 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுடன் 14 ஏக்கர் மற்றொரு கம்பனிக்கு 2021 மே மாதத்தில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், 2022 செப்தெம்பர் 05 இல் உள்ளவாறு குத்தகைக்கு பெற்ற 3 கம்பனிகளில் ஒன்று மாத்திரமே செயற்பாட்டில் இருந்தது. | குச்சவெளி காணிகளை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 1995 யூலை 12 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. வரிவிதிப்புக்கு உட்பட்டு செய்யப்பட வேண்டும் என அங்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இது சராசரி வரி தொகையை விட அதிகமாக இருந்ததால், முதலீட்டு நடவடிக்கைகளுக்கு குறைந்த எண்ணிக்கையிலான முதலீட்டாளர்கள் முன் வந்தனர். அந்த நிபந்தனைகளின் கீழ் இரண்டு முதலீட்டாளர்களிற்கு வழங்கப்பட்டது. 99 வருட குத்தகை ஒப்பந்தத்திற்கு முதலீட்டாளர்கள் முன் வரும் போக்கு குறைவடைந்ததமை | குத்தகைதாரர்கள் மூலம் செயற்பாடுகளை தொடங்குவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் குத்தகைத் தொகை சராசரியை விட அதிகமாக உள்ளமை காரணமாக 2010 இல் பெறப்பட்ட சனாதிபதி சுற்றறிக்கையின் பிரகாரம் குத்தகைக் காலத்தை 30 வருடங்களிற்கு நீடிக்குமாறு சுற்றுலா அமைச்சின் செயலாளர் 2019 இல் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கினார். மேலும், தற்போது முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்கள் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் சவாலுக்கு உள்ளாகியுள்ளதால், 2023 ஆம் ஆண்டு முதல் அந்த செயற்திட்டங்கள் விரும்பிய இலக்குகளை நோக்கி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஆ) | 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கல்பிட்டியின் 12 தீவுகளில் 2057.90 ஏக்கர் காணியை சுற்றுலா நடவடிக்கைகளுக்கு இலவச மானியமாக அதிகாரசபை பெற்றது. அந்த 12 தீவுகளில், 05 தீவுகளுக்குச் சொந்தமான 206.74 ஏக்கர் காணி மாத்திரமே 03 கம்பனிகளுக்கு 2010, 2011 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டு இறுதிக்குள் அந்த கம்பனிகள் எதுவும் செயற்படத் தொடங்கியிருக்கவில்லை. குத்தகைக்கு விடப்பட்ட கம்பனிகளில், 2 கம்பனிகள் 3 முதல் 5 ஆண்டுகளுக்காக முறையே ரூபா 43,275,455 மற்றும் ரூபா 9,063,277 வாடகை நிலுவைகளை கொண்டிருந்தன. | கல்பிட்டி காணிகளில் இருந்து இப்பந்திவ் மற்றும் வெள்ளைத் தீவுக்கூட்டங்கள் இரண்டு கம்பனிகளால் குத்தகைக்கு பெறப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் உள்ளவாறு இரண்டு கம்பனிகள் மாத்திரமே முதலீடு செய்ய முன்வந்தன. அதற்கான காரணங்கள் அந்தக் காலத்தில் இருந்தவையான போதிய உள்கட்டமைப்பு வசதியின்மை மற்றும் ஒரு கம்பனியால் திட்டமிடப்பட்ட தண்ணீர் பங்களாக்களுக்கு அங்கீகாரம் பெற முடியாமல் இருந்தமை மற்றும் மற்ற கம்பனி திட்டமிட்ட செயற்திட்டத்துடன் தொடர்புடைய சமூகத்தில் உள்ள பிரச்சனையான சூழ்நிலைகள் என்பனவாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காலத்திலும் கொவிட் காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் காரணமாக | காணியை செயற்திறனாக பயன்படுத்துதல் மற்றும் குத்தகைதாரர்கள் செயற்பாடுகளை தொடங்குவதில் தாமதம் ஏற்படுதல் குறித்து உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீதமுள்ள 8 தீவுகளில் 6 தீவுகளுக்கு முதலீட்டாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். மீதமுள்ள இரண்டு தீவுகளுக்கு முதலீட்டாளர்களைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு கம்பனி 2022 மார்ச் அளவில் 2021 திசெம்பர் 31 வரையிலான அனைத்து நிலுவைகளையும் தீர்வு செய்துள்ளது. அப்போதிருந்து கொடுப்பனவு எதுவும் மேற்கொள்ளப்படாததால் 1,355,740 மில்லியன் இன்னும் நிலுவையாக உள்ளது. மற்ற கம்பனியாலும் ரூபா 47,903,179.42 நிலுவைத் தொகை தற்போது வரை பேணப்பட்டு வருகிறது, மேலும் இந்த முதலீட்டாளர் செயற்திட்டத்தை மேலும் தொடர விருப்பம் காட்டாததால் இது குறித்து கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும். | |
| (இ) | அதிகாரசபைக்கு சொந்தமான 37 விருந்தினர் இல்லங்களில், 9 விருந்தினர் இல்லங்கள் இரண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரை குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை, எனவே ஆதனம் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | ஆனமடுவ, வீரகெட்டிய, நாலந்த, ராகலை மற்றும் பட்டலுஓயா விருந்தினர் இல்லங்களுக்கு கேள்விகள் கோரப்பட்ட நிலையில் அந்த விருந்தினர் இல்லங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான முதலீட்டாளர்கள் முன்வந்திருக்கவில்லை. | ஆதனங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | காலி மாவட்டச் செயலாளரின் 2017 யூன் 20 ஆம் திகதிய DPS/LND/03/BAN/General ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் தெட்டுவ பிரதேசத்தில் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 173,159,909 தொகை செலுத்தப்பட்டு காணி சுவீகரிப்பு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 செப்தெம்பர் 05 வரையிலும் அங்கு சுற்றுலா | தெட்டுவ சுற்றுலா அபிவிருத்தி வலயம் பெந்தோட்டை மாவட்ட செயலாளரால் 2004 பெப்ரவரி 10 இல் பிராந்திய செயலாளரின் அங்கீகாரத்துடன் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு நட்டஈடு செலுத்தி கையகப்படுத்தப்பட்டது. தற்போது இப்பகுதியில் எல்லைகளை குறிக்கும் வகையில் எல்லை வேலிகள் அமைக்கும் பணி நடைபெற்று | ஆதனத்தை செயற்திறனாக பயன்படுத்துதல் தொடர்பாக முகாமைத்துவம் முறையாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருகிறது. ஒரு முதலீட்டாளர் சுற்றுலா செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்வந்தார். எனினும் முதலீட்டாளர் முதலீட்டு செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்த பின்னர், முதலீட்டாளர் ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையை முதலீடு செய்ய வேண்டும் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை நிபந்தனை விதித்தது, முதலீட்டாளர் குறிப்பிட்ட காலத்திற்குள் பணம் செலுத்தியிருக்கவில்லை.<br>மேலும் சுற்றுலா அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பிரதமர் செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் முதலீட்டு செயற்திட்டத்தை இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br>2020/2021 ஆம் ஆண்டில், இந்த காணி பயிர்ச்செய்கைக்கு உகந்ததா என ஆய்வு செய்வதற்காக இராணுவத்திற்கு வழங்கப்பட்டதன் காரணமாக, இந்த ஆண்டுகளில் தெட்டுவ சுற்றுலா வலயத்தின் அபிவிருத்தியும் ஓரளவு தடைபட்டது. எதிர்காலத்தில் இந்த சுற்றுலாப் பகுதிக்கான பிரதான திட்டமொன்றை தயாரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | |

### 3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபை, ஊக்குவிப்பு பணியகம், ஹோட்டல் பாடசாலை மற்றும் மாநாட்டு பணியகம் ஆகியவற்றுக்கான குழு மருத்துவக் காப்புறுதி (குழுக் கொள்கை) 2021 ஆம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட போட்டி கேள்வியின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை காப்புறுதி கம்பனியிடமிருந்து | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது குறித்த வருடத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட பெறுகை செயன்முறையை பின்பற்றி நேரடி முறையின் கீழ் காப்புறுதி சேவை வழங்குநரைத் தெரிவு செய்தது.<br>அதிகாரசபைக்கு தெரியாமல் காப்புறுதி முகவர் ஒருவருக்கு குறித்த காப்புறுதி கம்பனி | கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

பெறப்பட்டதுடன் அதற்காக நான்கு நிறுவனங்களால் ரூபா 50,469,628 தொகை காப்புறுதி கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், அதிகாரசபையின் தலைவரும் பணிப்பாளர் நாயகமும் ஒரு தரகு கம்பனியை பெயரிட்டு, மேற்படி கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய தரகை அந்த கம்பனிக்கு செலுத்துவதற்கும், அந்த பணத்தை குவைத்தில் சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கும் காப்புறுதிக் கம்பனிக்கு அறிவித்தனர். மீளாய்வாண்டில் பயனடைந்த எந்த ஒரு ஊழியரும் தரகு கம்பனியின் சேவையைப் பெறவில்லை மேலும் இந்தப் பணம் எந்த சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை.
எனினும், காப்புறுதிக் கம்பனி 2021 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தரகு கம்பனிக்கு ரூபா 4,798,290 தரகை செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் நேரடியாக இடம்பெற்ற காப்புறுதி கொடுக்கல்வாங்கலிற்கு தரகு கோருவது கணக்காய்வில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலாகும்.

குறிப்பிட்ட தரகு தொகையை செலுத்தியதென முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர் அதிகாரசபை முகாமைத்துவத்திடம் தெரிவித்தார்.
பின்னர், அமைச்சரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், குவைத்தில் சிக்கியுள்ள இலங்கை வெளிநாட்டு பெண் பணியாளர் குழுவை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட காப்புறுதி கம்பனியின் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தொடர்புடைய நிதி பரிமாற்றம் ஒரு முகவர் மூலம் மாத்திரமே செய்ய முடியும் என்று குறித்த காப்புறுதி கம்பனி அமைச்சரிடம் தெரிவித்தது. அதன் பிரகாரம் அமைச்சர் ஒரு தரகு நிறுவனத்தை பெயரிட்டார். அப்போதைய தலைவரும், பணிப்பாளர் நாயகமும், அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒரு உன்னதமான சமூகப் பணிக்காகப் பயன்படுத்துவதற்காக, முன்னாள் அமைச்சரால் பரிந்துரைக்கப்பட்ட தரகு கம்பனிக்கு தொகையை மாற்றுமாறு எழுத்துமூலமாக மாத்திரமே கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதுமட்டுமல்லாமல், உரிய அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தரகுத் தொகை தொடர்பான வேறு எந்த தகவலும் அல்லது விபரங்களும் அதிகாரசபைக்கு தெரியாது என்பதுடன், முன்னாள் அமைச்சருக்கும் காப்புறுதி கம்பனியின் தலைவருக்கும் இடையில் இந்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதால், அதிகாரசபைக்கு இது தொடர்பான மேலதிக தகவல்கள் தெரியாது என்பதை வலியுறுத்துகிறோம்.

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் பல தடவைகள் தலைவரினால் கையொப்பமிடப்பட்ட பொருள் கோரல் குறிப்புக்கள் மூலம் தலைவரின் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலக உதவியாளர் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திடம் இருந்து ரூபா 1,072,102 தொகையான ரோணர்களைக் கோரியிருந்த போதிலும் அவை அதிகாரசபையின் களஞ்சியங்களிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. குறித்த பொருள் கோரிக்கை தொடர்பில் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சல் மூலம் செய்தியை அறிவித்திருந்த போதிலும் 2022 செப்தெம்பர் 05 வரையிலும் அது தொடர்பில் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . அதையும் மிறி 2021 ஆகஸ்ட் 05 இல் பணிப்பாளர் நாயகம் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்ட குறித்த அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோர் களஞ்சியங்களில் இருந்து ரூபா 1,234,540 பெறுமதியான நகல் பிரதிகள் மற்றும் ரோணர்களைத் திருடிச் சென்றுள்ளனர், மேலும் அவர்களின் சேவைகள் இடைநிறுத்தப்பட்ட போதிலும் ரூபா 198,5000 பெறுமதியான மடிக்கணனி புதிதாக கொள்வனவு செய்யப்பட்டவை 2022 ஆகஸ்ட் 24 இல் ஓய்வு விடுதி முகாமைத்துவ பிரிவில் தவறவிடப்பட்டன. அதன் | தலைவர் அலுவலகத்தின் கடமைகளுக்காக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ரோணர் அல்லது ஏனைய காகிதாதி உருப்படிகள் அதிகாரசபையின் சொத்துக்கள் அல்ல என்பதால், அதிகாரசபையின் களஞ்சியங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் முறை காணப்படவில்லை. தலைவரின் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளரும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட அலுவலக உதவியாளரும் மேற்கொண்ட திருட்டு தொடர்பாக கொள்ளுப்பிட்டி பொலிஸில் 2021 ஆகஸ்ட் 11 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 21/14/200 மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தற்போது 02 அமர்வுகள் நடைபெற்றுள்ளன. மேலும், அதிகாரசபையின் வேண்டுகோளுக்கு இணங்க, அமைச்சின் செயலாளரின் தலையீட்டுடன் பொது நிர்வாக அமைச்சின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் பூர்வாங்க விசாரணையை நடாத்தி, அதற்கான பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கை 2022 ஆகஸ்ட் மாதத்தில் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டது. இந்த அறிக்கை எதிர்காலத்தில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், | நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் பலப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ஆரம்ப முறைப்பாடுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் பலவீனம் தொடர்பாக முகாமைத்துவத்தின் செயற்பாட்டிலுள்ள தலையீடு காணப்படாததால் தொடர்ந்து மோசடிகள் இடம்பெறும் சூழல் அதிகாரசபையில் உருவாக்கப்பட்டுள்ளது. | முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்ட பின்னர் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு ஊழியர்களுக்கும் குற்றப்பத்திரிகைகள் வழங்கப்படும். குறித்த சம்பவங்கள் தொடர்பில் உரிய முகாமைத்துவத்தினால் பொதுவான சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டுள்ளது என்பதும் இதனால் ”ஆரம்ப முறைப்பாடுகளில் முகாமைத்துவம் தீவிரமாக தலையிடவில்லை” என்ற அவதானிப்புடன் உடன்பட முடியாது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. | |
| (ஆ) | பென்தோட்ட விடுமுறை விடுதியின் நீர் விநியோக முறைமையைப் பழுதுபார்ப்பதற்கான கேள்வியின் போது, ICTAD ஆல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று ஒப்பந்தக்காரர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் ரூபா 65,510,000 இற்கான ஒப்பந்தத்திற்கு வழங்குநர் தகுதியற்றவராக இருந்த போதிலும் அவரிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | குறித்த பெறுகை தொடர்பாக, 2020.08.13, 2020.12.10 மற்றும் 2021.03.24 ஆகிய திகதிகளில் மூன்று பெறுகை அறிவிப்புக்கள் பிரசுரிக்கப்பட்டன. கேள்விக்கான முதல் அழைப்பில், இரண்டு கேள்விகள் பெறப்பட்டதுடன் அக் கேள்விகள் தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது நிராகரிக்கப்பட்டன. இரண்டாவது சுற்று கேள்வியின் போது ஒரு கேள்வி மாத்திரமே பெறப்பட்டு, அந்த கேள்வியும் நிராகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பொறியியல் விடயங்கள் தொடர்பாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB) அனுப்பிய 2021.01.12 ஆம் திகதிய அறிக்கையின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மீண்டும் கேள்வி மதிப்பீட்டின் இரண்டாவது சுற்றில் கேள்விகளை கோருவதற்கு பரிந்துரைத்தது. அங்கு, ஆலோசனை | கேள்விகள் கோரப்படும் போது அறிவிக்கப்பட்ட அளவுகோல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறுவனம் தகுதி அளவுகோல்களை மாற்றி மூன்றாவது பெறுகைக்கான கேள்வி ஆவணங்களை 2021.02.03 இல் வழங்கியது. அதன் பிரகாரம் முன்னைய அளவுகோல்களிற்கு மேலதிகமாக, மற்றொரு அளவுகோல் பின்வருமாறு சேர்க்கப்பட்டது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினத்திற்குள் 40 செயற்திட்டங்களில் உள்ளடங்கிய 218 உப செயற்பாடுகளில் 155 செயற்பாடுகள் எந்த நிதி முன்னேற்றமும் இல்லாமல் இருந்தன. சதவீதமொன்றாக, இது 71 சதவீதமாக இருந்தது. உண்மையான செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்ய முடியவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் நிலைமை காரணமாக அந்த ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட பெரும்பாலான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. 2021 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் பெரும்பாலானவை 2002 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன, ஏனெனில் எதிர்காலத்திற்காக அவற்றைச் சுறுசுறுப்பாகச் செயற்படுத்துவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை. நிதி முன்னேற்றம் குறைவாக இருப்பதாகக் காட்டப்பட்ட போதிலும் நிதி முன்னேற்றத்தை விட செயலாற்றல் அதிகமாக உள்ளதுடன் சில உப செயற்பாடுகளுக்கு நிதிச் செலவினம் இல்லாதது முக்கிய காரணங்களாக இருக்கலாம். எனினும் நாட்டில் நிலவும் கொவிட் சூழ்நிலையில், ஊழியர்கள் பணியிடத்திற்கு வருவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளக பயணங்களுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டம் 2021 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் குறைந்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கொண்ட ஆண்டாக மாறியது. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒரு பயனுள்ள முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |